DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.300/2025
Deposition of DW3

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.சுகுணா |
| Father's / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05 day of Aug 2026.
புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

1. புகார்தாரரை எனக்கு தெரியும். செந்தில்குமார் மூலம் எனக்கு புகார்தாரரை தெரியும். 2023 ல் செந்தில்குமார் மூலம் புகார்தாரரிடம் ரூ.100000/- பணம் வாங்கினேன். அதற்கு ஆதரவாக ஒரு காசோலையை ரூ.1 லட்சம் நிரப்பி கொடுத்தேன். தேதி குறிப்பிடவில்லை. செந்தில்குமார் மூலம் அவரது Gpay யிலிருந்து புகார்தாரருக்கு மாதம் ரூ.5000 அனுப்பினேன். ரூ.60000/- வரை பணம் அனுப்பியுள்ளேன். ரூ.40000/- மீதி பணத்தை மதுரை, சுந்தரம் பார்க்கில் வைத்து செந்தில்குமார் மூலம் புகார்தாரரிடம் கொடுத்து விட்டேன். நான் பணத்தை கொடுத்த பின்பு காசோலையை புகார்தாரர் திருப்பி தரவில்லை. பின்னர் புகார்தாரரிடம் போன் செய்து காசோலையை கொடுக்கும்படி நான் கேட்டேன். அதற்கு அவர் தகாத வார்த்தைகளை பேசி மேற்கொண்டு 1 லட்சம் வேண்டுமென்று புகார்தாரர் மிரட்டினார்.

2) 16.07.2025 ல் புதுார் காவல்நிலையத்தில் புகார்தாரரின் மீது புகார்

கொடுத்தேன். விசாரணைக்காக புகார்தாரரை அழைத்தார்கள். அதற்கு புகார்தாரர் காவல்நிலையத்திற்கு வரவில்லை. காவல் நிலையத்திலிருந்து புகார்தாரருக்கு அழைப்பாணை அனுப்பினார்கள். 28.07.2025 ல் புகார்தாரர் காவல்நிலையத்திற்கு வந்தார். அப்போது எனது காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்துவிட்டார். மேற்படி விபரத்தை நான் காவல்நிலையத்தில் கூறினேன். அதற்கு நீதிமன்றத்தில் பார்த்து கொள்வதாகவும், தகாத வார்த்தையால் பேச மாட்டேன் என்று புகார்தாரர் காவல்நிலையத்தில் எழுதி கொடுத்துள்ளார். நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளும்படி காவல்நிலையத்தில் கூறிவிட்டார்கள். புதுார் காவல்நிலையத்தில் புகார்தாரர் மீது கொடுத்த புகார்மனுவினை தாக்கல் செய்கிறேன். **மேற்படி ஆவணம் எ.சா.ஆ.3 ஆகும்.** மேற்படி புகார் மனு இரசீது எண் 584/2025 தாக்கல் செய்கிறேன். **மனு இரசீது எ.சா.ஆ.4 ஆகும்.** நான் கொடுக்க வேண்டிய தொகையை திருப்பி கொடுத்துவிட்டேன்.

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.08.05 18:45:20 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam